

எட்டயபுரம் பேரூர் 8வது வார்டு கழக செயலாளர் மா.பிச்சை இல்ல திருமண விழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் , தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

'ஜல்லிக்கட்டு' பற்றி அவதூறாக பேசிய

# த.வெ.க. எம்.எல்.ஏ. கருப்பையாவுக்கு மாடுபிடி வீரர்கள் - மாடு வளர்ப்போர் கண்டனம்!

மதுரை, ஆக. 31 -

உலகப் புகழ்பெற்ற அலங்கநல்லூர் ஜல்லிக்கட்டு சட்டப் போராட்டம் கண்டு மீட்டெடுத்து கொடுத்தவர் தலைவர் கலைஞர் த.வெ.க. சோழவந்தான் தொகுதி எம்எல்ஏ எம்.வி. கருப்பையாவின் சட்டமன்ற பேச்சுக்கு மதுரை மாவட்ட மாடுபிடி வீரர்கள் மாடுகள் வளர்ப்போர் என பலரும் கடும் எதிர்ப்பு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு போன்ற ஊர்களில் வருடந்தோறும் உலகப்புகழ் பெற்ற தமிழர்களின் பாரம்பரிய வீரத்தை எடுத்துரைக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெறும்.

அதனை பல்லாயிரம் பேர் ஆர்வத்துடன் எதிர்பார்த்து தமிழ்நாடு மற்றும் பல மாநிலங்கள், பல வெளிநாடுகளில் இருந்து ஆவலுடன் கண்டுகளித்து மகிழ்வதும், மாடுபிடி வீரர்களும் மாடு வளர்ப்போரும் பெருமையுடன் பங்கேற்பதும் வழக்கம் திருவிழா கோலம் காணும் இந்த உலகப்புகழ்பெற்ற பெற்ற தமிழர்களின் வீர விளையாட்டை கொச்சைப்படுத்தும் வகையிலும் இளைஞர்களின் வீரச்செயலை அவமானப்படுத்தும் வகையிலும் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா சட்டசபையில் கூறியிருப்பது மதுரை மாவட்ட மக்களை கோபப்படுத்தி உள்ளது, இந்த பேச்சுக்கு தவெக முதல்வர் கண்டனம் தெரிவிக்காத நிலையில் மாவட்ட மக்களை மேலும் கோபத்தின் உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளது, அதன் விவரம்

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரில் பேசிய சோழவந்தான் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா தமிழர்களின் பாரம்பரிய மிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியால் இளைஞர் சமுதாயம் சீரழிகிறது என்று கூறினார்

இதை அவை குறிப்பிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து அமர்ந்திருந்த த.வெ.க.வினரும், முதல்வரும் எதுவும் சொல்லவில்லை.

ஜல்லிக்கட்டு போட்டி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் வீரத்தையும் கலாச்சாரத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் அற்புதமான விளையாடாக திகழ்ந்து வந்துள்ளது

ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டிக்கு சோதனை வந்த காலத்தில் முதல் குரல் கொடுத்தவர் அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மாபெரும் சட்ட போராட்டம் காண மாவட்ட செயலாளர் பி.மூர்த்தியை அழைத்து அவருடன் சட்ட நிபுணர்களை டெல்லிக்கு அனுப்பி சட்டப் போராட்டம் காண செய்து வெற்றியும் கண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள், அதைத் தொடர்ந்து அதிமுக ஆட்சியில் மீண்டும் ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டு சோதனை வந்தபோது தமிழ்நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்தது, அப்போது அலங்காநல்லூரில் போராட்டக் களத்தில் இறங்கியவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டத்தில் முதலில் துவங்கிய ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் தமிழ்நாடு முழுவதும் கடல் தாண்டி உலகம் முழுவதும் நடக்க தொடங்கியது.

குறிப்பாக வரலாற்றில் முத்திரை பதிக்கக்கூடிய வகையில் நடந்த மெரினா போராட்டம் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தத. இந்த போராட்டத்தின் வாயிலாக மீண்டும் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் துவக்கப்பட்டு எல்லோரும் மகிழ்ச்சி கொண்டார்கள்

கலைஞர் அவர்கள் தமிழர்கள் வீர விளையாட்டு என ஜல்லிக்கட்டு போட்டியில் மிக்க ஆர்வம் கொண்டதை போல் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஆர்வம் கொண்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதல்முறையாக அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் சுமார் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் சர்வதேச தரத்தில் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தை அமைத்து அங்கு ஜல்லிக்கட்டு போட்டிகளை துவக்கி வைத்து மகிழ்ச்சி கொண்டார்

அதேபோல் கழக இளைஞரணி செயலாளர், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாக்களில் பங்கேற்று பல லட்சங்கள் மதிப்படையை பரிசுகளை வழங்கி மாடுபிடி வீரர்களையும், மாடு வளர்ப்பவர்களையும் கவுரவித்தார்

அதை தொடர்ந்து மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தொடர்ச்சியாக ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தி காளைகளுக்கும், காளையர்களுக்கும் பல பரிசுகளை வழங்கினார். மேலும் பல்வேறு அமைப்பினரும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரத்யோக ஜல்லிக்கட்டு போட்டிகளை பாதுகாப்புடன் நடத்தினர்

இதனை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்புடன் அமர்ந்து பார்த்து மகிழ்ந்தார்கள்

பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மாடுபிடி வீரர்கள் காளைகள் பங்கேற்றன, பல மாவட்டங்களில் இருந்து உற்சாகத்துடன் இளைஞர்களும் பொதுமக்களும்,

கலைஞரின் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாக்களை பார்த்து மகிழ்ந்தார்கள்.

மதுரை உள்ளிட்ட தென் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அதிக அளவில் பெண்களும் ஜல்லிக்கட்டு காளைகளை வளர்த்து அவர்களே ஜல்லிக்கட்டு கலத்திற்கு கொண்டு வந்து போட்டியில் பங்கேற்று பரிசுகளை பரிசு பெற்ற வீர மங்கைகளும் உண்டு .

இப்படி ஜல்லிக்கட்டை போற்றி புகழ்ந்து உயிரிலும் மேலாக வளர்த்து ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் இளைஞர்களை இழிவுபடுத்தும் வகையில் சட்டசபையில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா பேசியதற்கு அவரது போக்கிக்கு கண்டனம் தெரிவிக்காமல் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் கைகட்டி வாய் பொத்தி இருந்ததற்கு மதுரை மாவட்ட மக்கள் மட்டும் இன்றி தென் மாவட்ட மக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்

இதே போல் மாடுபிடி வீரர்கள், மாடு வளர்ப்போர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் பெண்கள் பல்வேறு கட்சியினர் கழகத்தினர் என பெரும்பாலானோர் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இரா.மனோகரன் செய்தியாளர், மதுரை மாவட்ட முரசொலி.



வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரைஆற்றினார். அருகில் மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, சி.நரசிம்மன், பகுதி செயலாளர் வன்னியராஜா, மாநகராட்சி துணை மேயர்தெற்கு பகுதி செயலாளர் எம்.சுனில்குமார், பொதுக்குழு உறுப்பினர் தயாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு! வேலூர் மாவட்டம் காட்பாடியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவேந்தல் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

வேலூர், ஆக. 31 -

வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் நினைவேந்தல் பொதுக்கூட்டம் சித்தூர் பேருந்து நிலையத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா தலைமை தாங்கினார்.

வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரை ஆற்றினார்.

வேலூர் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளர் எம். சுனில்குமார், காந்திநகர் பகுதி செயலாளர் என்.பரமசிவம் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சரவணன், கே. கருணாகரன், எஸ். தணிகாசலம், சி.ரவி, ஏ.கே.முருகன், பி.முருகபெருமாள், ஒன்றிய குழு தலைவர் வி. வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாநகர துணை செயலாளர். ஒய். தேவநேசன், வட்ட செயலாளர்கள் கே. அன்பு,பி. லோகநாதன், பி. விநாயகம், ஏ. எம். சம்பந்தம்,சி. கிரி,சி. அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டீடா சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் ஜி. ரவிக்குமார், சித்ரா லோகநாதன், சித்ரா மகேந்திரன், கே. ஜி. சீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி சிறப்புரை ஆற்றினார். பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் விஜய் அடுத்த பிரதமர் என தவெ.க. வினர்பேசி வருவது குறித்த கேள்விக்கு அவர் ஐ.நா. சபைக்கு கூட தலைவராக வரலாமென சொல்வார்கள். கற்பனைக்கு எல்லையே கிடையாது. அவர்கள் என்ன வேணா நினைக்கட்டும். அவர் பிரதமராக வர வேண்டும் என சொன்னாலே ராகுல்காந்தி பிரதமர் இல்லை என முடிவு பண்ணிட்டாங்க இல்லையா? எனக் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி. நரசிம்மன், தெற்கு மாவட்ட அவைத்தலைவர் தி. அ. முகமது சகி,பொதுக்குழு உறுப்பினர் வீ. தயாநிதி, கழக புரவலர் துரை சிங்காரம், மாநில இலக்கிய அணி துணை செயலாளர்கள் சேர்க்காடு கென்னடி, பிரம்மபுரம் பழனி, தலைமை கழக பேச்சாளர்கள் சாந்தகுமார், குமரன், பொதுக்குழு உறுப்பினர் ஜி. லோகநாதன்,

மாவட்ட பொருளாளர் நா. அசோகன், ஒன்றிய செயலாளர்கள்கே. சீதாராமன், ஜெயா முருகேசன், வீ. பிரதீஷ், பொதுக்குழு உறுப்பினர் கே. தயாளமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரமிளா தயாநிதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வாசுகி கோட்டீஸ்வரன், கோரந்தாங்கல் குமார், ஜே. சி. பி. சுரேஷ், ஜி. பி. கமல்ராஜ், பன்னீர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இறுதியில் திருவலம் பேரூர் செயலாளர் கே. நேரு நன்றி கூறினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# செஞ்சி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



செஞ்சி, ஆக. 31 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில்

01.09.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

எனவே கூட்டத்திற்கு செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 22.8.2016அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர ,பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள்சம்பந்தமாக,

2.கழக ஆக்கப்பணிகள் சம்மந்தமாக

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் வெங்காயம் விலை கடும் உயர்வு!

சென்னை, ஆக. 31 -

வெங்காயம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில்தான் மானிய விலையில் தமிழக ரேஷன் கடைகளில் வெங்காம் விற்பனை செய்ய தமிழக அரசு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

வெங்காயம் நம் வீட்டு சமையல் அறையில் தவிர்க்க முடியாத பொருளாக உள்ளது. தினந்தோறும் சமையலில் வெங்காயம் முக்கிய அங்கமாக உள்ளது.


கடந்தசில வாரங்களாக வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மாத இறுதியில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ரூ.30 ஆக இருந்தது. தற்போது சில்லரை விற்பனையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.60க்கு விற்பனை யாகி வருகிறது.

இதே போன்று காய்கறி விலைகளும் கடும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி

### ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். 'மிசா'வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். சேகர்

### ஆகஸ்ட் 31 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.